உ

ஸ்ரீ விநாயகர் துணை

ஸ்ரீ பங்கசாட்சி உடனமர் ஸ்ரீ காடையீஸ்வரர் துணை

கோபுர தரிசனம் !

கோடி புண்ணியம் !



**ஸ்ரீ சிவபெருமான் துதி**

மண்ணினல்ல வண்ணம்வாழலாம் வைகலும்
எண்ணினல் கதிக்கும் யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை இருந்ததே !!

**ஸ்ரீ அம்பாள் துதி**

பூத்தவளே ! புவனம் பதினான்கையும் பூத்த வண்ணம்
காத்தவளே ! பின் கரத்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவளே ! என்றும் மூவா முகுந்ததற் கிளையவளே
மாத்தவளே ! உன்னையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே !!

## தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலையத்துறை

## திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், காடையூர்,

பொருள்தந்த கூட்டத்தின் ஒரு பிரிவான முழுக்காத கூட்டத்திற்கு சார்ந்த

# அருள்மிகு ஸ்ரீ விநாயகர்,
# ஸ்ரீ பங்கசாட்சி அம்பிகை உடனமர் ஸ்ரீ காடையீஸ்வரர்,
# ஸ்ரீ வெள்ளையம்மன், ஸ்ரீ கருணாகர பெருமாள்

## திருக்கோயில் அஷ்டபந்தன

# மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்

நாள் : 12.07.2024 - வெள்ளிக்கிழமை (குரோதி வருடம், ஆனி - 28)

**ஸ்ரீ விநாயகர் துதி**

மண்ணுல கத்தினில் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதில் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவோம் !!



**ஸ்ரீ முருகன் துதி**

முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான் !

**ஸ்ரீ பெருமாள் துதி**

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியவர் படுதுயராயினவெல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்வீசும் பருளும் அருளோடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா எனும் நாமம் !

**ஸ்ரீ வெள்ளையம்மன் துதி**

செல்வமும் சிறப்பும் சேரும் செழுந்–திரு புகழுமாகும்
கல்வியும் கனகமும் எய்தும் கருணையும் அறிவும் உண்டாம்
நல்லனவெல்லாம் நண்ணும் நல்காடையூர் வாழ்
வெள்ளையம்மன் தன் செழு மலரடிகள் வணங்குவார்க்கே !

பேரன்பிற்குரிய சிவநேயச் செல்வர்களே, வணக்கம்,

எல்லாம் வல்ல உமையொரு பாகனின் தனிப்பெருங் கருணையினால் நம் பாரத பீட பூமியானது அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை எனும் பழமொழிக்கேற்ப ஆன்மீகநெறி மிகச்சிறந்து விளங்கும் அற்புத நாடாகும். அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராய் விளங்கும், உலகை காக்கும் பரம் பொருளாய் எங்கும் நிறைந்த இறைவன் பஞ்சக்ருத்யம் என்று சொல்லப்படுகின்ற சிருஷ்டி (படைத்தல்), ஸ்திதி ( காத்தல் ), சம்ஹாரம் ( அழித்தல் ), திரோபாவம் (மறைத்தல்), அனுக்ரஹம் (அருளல்) போன்ற ஐந்து நிலைகளிலும் சைவத்தின் தனிப்பெரும் தெய்வமாக விளங்கும் சிவபெருமான், இத்திருக்கோயிலில் ஸ்ரீ விநாயகர் முதல் ஸ்ரீ சண்டிகேஸ்வரர் வரை பரிவாரங்களுடன் கூடிய அருள்மிகு ஸ்ரீ பங்கசாட்சி உடனமர் ஸ்ரீ காடையீஸ்வரப் பெருமான் என்ற திருநாமம் தாங்கிய இறைவனுக்கும் காக்கும் கடவுளாக விளங்கும் அருள்மிகு ஸ்ரீ கருணாகரப் பெருமாளுக்கும், ஸ்ரீ வெள்ளையம்மனுக்கும், திருக்கோயில் வளாகத்தின் முன் ஸ்ரீஅரசமரகணபதி, ராஜகோபுரம் முன் ஸ்ரீ கணபதி, ஸ்ரீ தண்டபாணி, ஸ்தல விருட்ச அரண், திருக்கோயில் முன்மண்டபமும், ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயிலும் ஆகம விதிப்படி திருப்பணிகள் செவ்வனே நிறைவு செய்து

நிகழும் மங்களகரமான குரோதி வருடம் ஆனி மாதம் 28-ம் நாள் (12.07.2024) வெள்ளிக்கிழமை சஷ்டி திதியும், உத்திரம் நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 8.30 மணிக்குமேல் 10.20 மணிக்குள் சிம்ம லக்கினத்தில் **மஹா கும்பாபிஷேகம்** நடைபெற உள்ளபடியால் ஆன்மீக அன்பர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ பங்கசாட்சி அம்பிகை ஸ்ரீ காடையீஸ்வரர், ஸ்ரீ வெள்ளையம்மன், ஸ்ரீதேவி, பூதேவி சமேத கருணாகரபெருமாள் திருவருள்பெற்று அறம், பொருள், இன்பம், வீடு முதலிய நான்குவகை பயன்களை பெற்று பேரானந்த பெருவாழ்வு அடைந்து வையத்துள் வாழ்வாங்கு வாழ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம்**

**C. குமரதுரை** B.Sc.,B.L.,
**இணை ஆனையர்**

**மு. இரத்தினாம்பாள்** M.A.,B.L.,
**உதவி ஆனையர் / செயல் அலுவலர்**

**K.C. ரகு**
**பரம்பரை அறங்காவலர்**

## நிகழ்ச்சி நிரல்

| நாள் | நேரம் | நிகழ்ச்சி விபரம் |
|---|---|---|
| ஆனி மாதம் - 23<br>07.07.24<br>ஞாயிற்றுக்கிழமை | காலை 7.00 மணி | மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், கணபதி ஹோமம், நவநாயகர் யாகம், திரவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | மாலை 6.00 மணி | மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், வாஸ்து பூஜை, பிரவேச பலி, ரக்ஷோக்ணம், திரவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| ஆனி மாதம் - 24<br>08.07.24<br>திங்கட்கிழமை | காலை 8.00 மணி | மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், திசா ஹோமம், சாந்தி ஹோமம், சம்ஹிதா ஹோமம், திரவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| | மாலை 6.00 மணி | மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், மிருத்சங்கிரஹணம், திரவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| ஆனி மாதம் - 25<br>09.07.24<br>செவ்வாய்க்கிழமை | காலை 8.00 மணி | மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், ஆச்சார்ய அஸ்திராபிஷேகம், தசவித ஸ்நானம், பிரசாதம் வழங்குதல்.<br><br>அக்னி சங்கிரஹணம், தீர்த்த சங்கிரஹணம் |
| | மாலை 4.30 மணி | முளைப்பாரி அழைத்தல் |
| | மாலை 6.00 மணி | மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், அங்குரார்பணம், சோமயாகம், கௌத்துகயாகம், ரக்ஷாபந்தனம், கும்பலங்காரம், கலாகர்ஷனம், அஸ்த்ர ஹோமம், முதல் கால யாக பூஜை, ஹோமம், திரவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| முத்தமிழ் போற்றும் முதல்வனுக்கு முத்தான முதற்காலம் நிறைவு | | |

## நிகழ்ச்சி நிரல்

| நாள் | நேரம் | நிகழ்ச்சி விபரம் |
|---|---|---|
| ஆனி மாதம் - 26<br>10.07.24<br>புதன்கிழமை | காலை 8.30 மணி | மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், விசேஷ சந்தி, பூத சோதனம், இரண்டாம்கால யாகபூஜை, ஹோமம், திரவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| இக பரம் வழங்கும் இன்பத்தலைவனுக்கு இரண்டாம் காலம் நிறைவு | | |
| ஆனி மாதம் - 26<br>10.07.24<br>புதன்கிழமை | மாலை 5.30 மணி<br><br>மாலை 6.30 மணி | மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், விசேஷ சந்தி, பூத சோதனம், மூன்றாம்கால யாகபூஜை, திரவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.<br>கோபுர கலசம் வைத்தல். |
| மூவுலகம் போற்றும் மூலப்பொருளுக்கு மூன்றாம்கால நிறைவு | | |
| ஆனி மாதம் - 27<br>11.07.24<br>வியாழக்கிழமை | காலை 8.30 மணி | மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், விசேஷ சந்தி, பூத சோதனம், நான்காம்கால யாகபூஜை, ஹோமம், திரவ்யாகுதி பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல். |
| நான்மறை போற்றும் நாயகனுக்கு நான்காம்கால நிறைவு | | |
| ஆனி மாதம் - 27<br>11.07.24<br>வியாழக்கிழமை | மாலை 6.00 மணி<br><br>இரவு 10.30 மணி | மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், விசேஷ சந்தி, பூத சோதனம், ஐந்தாம்கால யாகபூஜை, திரவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, பிரசாதம் வழங்குதல்.<br>அஷ்டபந்தனம் (மருந்து சாற்றுதல்) |
| ஐம்பெரும் பூத பெருமானுக்கு ஐந்தாம்கால நிறைவு | | |
| ஆனி மாதம் - 28<br>12.07.24<br>வெள்ளிக்கிழமை | காலை 5.00 மணி | மங்கள இசை, விநாயகர் வழிபாடு, புண்யாகம், பஞ்சகவ்யம், பிம்ப சுத்தி, ரக்ஷாபந்தனம், ஸ்பர்ஷாகுதி, ஆறாம்கால யாகபூஜை, ஹோமம், திரவ்யாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை. |
| ஆறுசமய ஆண்டவனுக்கு ஆறாம் காலம் நிறைவு | | |

## நிகழ்ச்சி நிரல்

| நாள் | நேரம் | நிகழ்ச்சி விபரம் |
|---|---|---|
| ஆனி மாதம் – 28<br>12.07.24<br>வெள்ளிக்கிழமை<br> | காலை<br>8.30 மணிக்குமேல்<br>10.20 மணிக்குள் | யாத்ரா தானம், கடம்புறப்பாடு.<br>அனைத்து<br>மூலமூர்த்திகளின் விமான இராஜ கோபுரம்<br>ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ பங்கசாட்சி, ஸ்ரீ காடையீஸ்வரர்,<br>ஸ்ரீ வெள்ளையம்மன், ஸ்ரீ ராஜகோபுரம்,<br>ஸ்ரீ கருணாகர பெருமாள் திருக்கோயில்கள்<br>**மஹா கும்பாபிஷேகம்.** |
| | மதியம் | மஹா அபிஷேகம், தசதானம், தச தரிசனம்,<br>கோபூஜை, பிரசாதம் வழங்குதல். |
| | மாலை | திருக்கல்யாணம், சுவாமி திருவீதி உலா. |

### சர்வசாதகம்

ஆகம பிரவீணர், சைவாகம பூஷணம், சிவாகம கலாநிதி

**சிவஸ்ரீ. செல்வகபில சிவாச்சாரியார்** அவர்கள்,

கபிலர்மலை.

### திருக்கோயில் அர்ச்சக ஸ்தானிகம்

**சிவஸ்ரீ. சி. ஸ்ரீதர் சிவாச்சாரியார், சிவஸ்ரீ. சு. கணேஷ் சிவாச்சாரியார்**

**சிவஸ்ரீ. ஜெ. கோகுல்நாத் சிவம்**

### ஸ்தபதி

சிற்ப செம்மல் - சிற்ப ரத்னாகரம்

**K. சுந்தரமூர்த்தி**

## முழுக்காத குலம் - பொருளந்தை குலம்

பெருமைமிக்க கொங்குநாட்டின் கால்நடைச்செல்வத்தின் சிறப்புடன் விளங்கும் காங்கேயநாட்டின் மேற்கு திசையில் அமைந்துள்ள காடையூர் எனும் நற்பதில் நடுநாயகமாக திருக்கோவில் கொண்டுள்ள ஆலயங்களை காங்கேய நாட்டை ஆண்டு வந்த நாட்டுப்பற்றுடைய பொருள்தந்த குலத்தாரின் ஒரு பகுதியான முழுக்காத குலபெருமக்களின் வம்சாவழியாக கொங்கு வேளாண் பெருமக்களில் பொருளன் என்னும் சிறப்பான குல முதல்வரின் கால்வழியாகத் தோன்றிய குலத்தினர் பொருளந்தை குலத்தினர் எனப்பட்டனர்.

மூவேந்தர்களோடும் கலந்து சீரும் சிறப்புமாக வாழ்ந்த பொருளந்தை குலத்தினர் படைத்தலைவர்களாகவும், சிற்றரசர்களாகவும், ஆட்சித்தலைவர்களாகவும் இருந்துள்ளனர். தெய்வத்திருமகளான வெள்ளையம்மாள் ஒரு பொருளந்தை குலத்தலைவருக்கு குலமகளாக வந்து நாட்டார் முன்னிலையிலே கற்புத்தெய்வமாகக் காட்சியளித்து வரலாறு படைத்த காரணத்தாலே அத்தாயையே குலதெய்வமாக ஏற்றுக்கொண்டு ஒரு பிரிவு பொருளந்தை முழுக்காது குலமெனப் பெயர் பெற்றது ஆகையால் பொருளந்தை குலத்தின் சிறப்புக்களுக்கும், வெள்ளையம்மாளின் தெய்வத்தன்மைக்கும் பொருளந்தை முழுக்காது குலம் வாரிசாகும்.

குல முதல்வி வெள்ளையம்மாளுக்கு நான்கு ஆண் மக்கள் பிறந்தனர். அவர்கள் பெயர்களை, கழுவறஞ்ச காங்கேயன், சோமன் காங்கேயன், தடிக்காளி காங்கேயன், சேணியன் காங்கேயன் என வம்சாவளி கூறுகிறது.

மறையவர் போற்றிடவே வானுலகம் போய்ச் சேர்ந்தார். தெய்வப் பிறவியாய்த் திரும்பிவிட்டாள் நட்டூர்க்கு, வறண்ட கழுமரம் வளமாய்ச் செழித்திருக்க, விடத்தலான் மரத்திடியில் வீற்றிருக்க வந்துவிட்டாள். தாய் சொல்லைக் காத்திடும் பொருள்தந்த முழுக்காத குலத்தவர் நீதி வழுவாமல் நிலைத்திருந்து வாழியவே !



## சிறப்பு அழைப்பாளர்கள்

ஆன்மிக சான்றோர்கள்

தமிழக மாநில அமைச்சர் பெருமக்கள்

பாராளுமன்ற உறுப்பினர்கள்

சட்டமன்ற உறுப்பினர்கள்

இந்துசமய அறநிலையத்துறை அதிகாரிகள்

அரசு அதிகாரிகள்

ஆன்றோர்கள், சான்றோர்கள்

## சொற்பொழிவு

திருமுருக வள்ளல் வாரியார் சுவாமிகளின் மாணவி

கலைமாமணி, வாகீச கலாநிதி,

**திருமதி. தேச மங்கையர்க்கரசி** அவர்களின்

கும்பாபிஷேக வர்ணனை நடைபெறும்.

மண்டலபூஜை :

ஆனி 29-ம் தேதி, 13.7.2024 சனிக்கிழமை முதல் 48 நாட்கள்

**மண்டலபூஜை** நடைபெறும்.

## கலை நிகழ்ச்சிகள்

9.7.2024 செவ்வாய்க்கிழமை, இரவு 7.30 மணிக்கு :

**காங்கயம் தமிழர் பாரம்பரிய கலைமன்றத்தின்**

**சங்கமம் ஒயிலாட்டம்** நடைபெறும்.

10.7.2024 புதன்கிழமை, இரவு 7.30 மணிக்கு :

**காங்கேயன் கம்பத்தாட்டம்**

மற்றும்

**பிறைசூடன் பெருஞ்சலங்கை ஆட்டம்** நடைபெறும்.

11.7.2024 வியாழக்கிழமை, இரவு 7.30 மணிக்கு :

**வண்ணமயில் வள்ளி கும்மியாட்டம்** நடைபெறும்.

---

தினந்தோறும் திருமறைத் தேவார இன்னிசை வேத பாராயணம், நாதஸ்வர கச்சேரி, சிறப்பு சொற்பொழிவு மற்றும் சிறப்பு பட்டிமன்றம் நிகழ்ச்சிகள் நடைபெறும். குலமக்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

அன்னதானம் :

ஆனி 23-ம் தேதி, 7.7.2024 ஞாயிற்றுக்கிழமை முதல்

**அன்னதானம்** நடைபெறும்.